கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.69/2016 வா.சா.1 வெங்கடாசலபதி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 03.06.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

10) அ.வ.எண். 436/2004 வழக்கு சொத்து சொக்கனூர் கிராமத்தில் உள்ளது என்றும் அதற்கும் இவ்வழக்கு சொத்திற்கும் தொடர்பு இல்லை என்றும் சொன்னால் சரிதான். அ.வ.எண். 436/2004 வழக்கு சொத்து பொறுத்த வரை நான் என் மனைவிக்கு 21.01.2004 ல் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் அடிப்படையில் உரிமையாளர் என்ற முறையில் அவர் வழக்கு தாக்கல் செய்து இருந்தார் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் அச்சொத்து எனக்கு 1984 உயிலில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்துகளில் ஒரு பகுதி என கண்டு தான் எழுதி உள்ளேன் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் அது வா.சா.ஆ 10 ஆக ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11) வா.சா.ஆ. 10 செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்திய போது 1984 உயிலின் அசலை என் மனைவியிடம் கொடுத்தேனா என்றால் ஞாபகம் இல்லை. அ.வ.எண். 436/2004 வழக்கு என்ன ஆனது என்றால் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது. நான் எந்த ஆண்டு பிறந்தேன் என்றால் 1969 ல் பிறந்தேன். அவ்வாறு எனில் நான் 1984 ல் இளவராக இருந்தேன் என்றால் சரிதான். அசல் உயிலை எனக்கு தர வேண்டும் எனவும் என்னை இடையூறு செய்யக்கூடாது எனவும் அ.வ.எண். 10/2000 யை என் பெற்றோர் மீது உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அவ்வழக்கு 30.07.2001

அன்று தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

12) என் தந்தை கிருஷ்ணசாமி 03.02.2004 அன்று அனுப்பிய அறிவிப்பை நான் 05.02.2004 தேதியில் கையொப்பம் இட்டு பெற்றுக் கொண்டேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அ.வ.எண். 10/2000 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் பெற்றோர் அவ்வழக்கில் 1984 உயில் என்று ஒன்று இல்லை என்றும் நான் சுவாதீனத்தில் இருப்பதாக சொல்வது பொய் என்றும் அவர்கள் தான் முழு சுவாதீனத்தில் உள்ளனர் என்றும் கட்சி செய்து தான் அவ்வழக்கை நடத்தினர் என்றால் ஞாபகம் இல்லை.

13) கடந்த 2004 ல் என் பெற்றோர் என் மீதும் என் மனைவி மீதும் புகார் அளித்து அதன் பெயரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் வழக்கில் விடுதலை செய்யப்பட்டுவிட்டேன். நான் அவ்வழக்கில் கைது செய்யப்பட்டேன் என்றால் சரிதான். எனக்கும் என் பெற்றோருக்கும் அப்போது எத்தனை ஆண்டுகளாக விரோதம் என்றால் சுமார் 7 ஆண்டுகளாக விரோதம் இருந்தது. 1995 ல் இருந்து 2007 வரை எனக்கும் என் பெற்றோருக்கும் இடையே மனஸ்தாபம் இருந்தது என்றால் சரிதான். அசல் உயில் எப்போது என் கைக்கு வந்தாக கூறுகிறேன் என்றால் 2011 வாக்கில் வந்தது என நினைக்கிறேன். அதனை யார் என்னிடம் கொடுத்தார்கள் என்றால் என் தாயார் கொடுத்தார்.

14) அவ்வாறு எனில் 2001 ல் என் பெற்றோர் ஆவணங்களை என்னிடம் கொடுத்து விட்டதாக கூறி இருந்தால் அது தவறு என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு சொத்து வருவாய் ஆவணங்களை என் பெயருக்கு மாற்றி கொண்டேன் என்றால் 1990 களில் மாற்றியதாக நினைக்கிறேன் சரியாக ஞாபகம் இல்லை. எந்த ஆவண அடிப்படையில் வருவாய் ஆவணங்களை என் பெயருக்கு மாற்றினேன் என்றால் என் தந்தை தான் மாற்றி இருப்பார்

எனக்கு தெரியாது. எந்த ஆண்டில் வருவாய் ஆவணங்கள் என் பெயருக்கு மாற்றப்பட்டது என என்னால் ஆவணங்கள் வாங்கி தாக்கல் செய்ய இயலுமா என்றால் சரிதான். வருவாய் ஆவணங்களை என் பெயருக்கு மாற்ற நான் விண்ணப்பம் அளிக்கவில்லையா என்றால் யார் விண்ணப்பம் அளித்தார்கள் என எனக்கு ஞாபகம் இல்லை.

15) 1984 ல் எனக்கு வயது 15 என்றால் சரிதான். வா.சா.ஆ. 9 உயில் அசல் காணாமல் போனதாக தான் நெகமம் காவல் நிலையத்தில் புகார் அளித்து வா.சா.ஆ. 21 மனு ஏற்பு ரசீது பெற்று வா.சா.ஆ. 22 பொது அறிவிப்பு செய்து வா.சா-ஆ.23 சான்று பெற்றேன் என்றால் சரிதான். 1984 ல் எனக்கு வயது 15 என்பதால் காளியப்ப கவுண்டர் வா.சா.ஆ. 9 உயிலை எழுதியதாக எனக்கு அப்போது நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ. 9 உயிலை நான் படித்து பார்த்து உள்ளேன் என்றால் படித்து பார்த்து உள்ளேன்.

16) வா.சா.ஆ- 9 உயிலில் காளியப்ப கவுண்டர் அதில் கட்டுப்பட்டசொத்துக்கள் தனக்கு பிதுராஜ்ஜித வகையில் பாத்தியப்பட்டதாக குறிப்பிட்டு உள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ 9 உயிலில் முதலாவது சாட்சியாக உள்ள மயில்சாமி எனக்கு உறவினரா என்றால் அவர் எனக்கு மாமா முறை ஆகும். மேற்படி மயில்சாமி தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் உள்ளார். வா.சா.ஆ 9 உயிலில் இரண்டாவது சாட்சியாக உள்ள கோபால்சாமி எனக்கு உறவினரா என்றால் இல்லை அவர் என் பக்கத்து தோட்டத்துக்காரர். மேற்படி கோபால்சாமி தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை . அவர் இறந்து விட்டார்.

17) வா.சா.ஆ.9 உயில் தொடர்பாக மயில்சாமியை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். வா.சா.ஆ. 9 உயிலில் காளியப்ப கவுண்டர் கையொப்பம் இல்லை என்றும் கைரேகை தான் வைத்து உள்ளார் என்றும் சொன்னால் சரிதான். வா.சா.ஆ. 9 உயிலுடன் ஒப்பிட வா.சா.ஆ. 9 உயிலுக்கு முந்தைய காளியப்ப கவுண்டர் கைரேகை கொண்ட

ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. காளிப்ப கவுண்டர் உயில் ஏதும் எழுதிவைக்கவில்லை என்றும் அதனால் தான் என்னால் அசல் உயிலை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் நான் மோசடியாக ஒரு உயிலை தயார் செய்து அதன் புகைப்பட நகலை மட்டும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வழக்காடி வருகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ. 13 பாக சாசனத்தை கேள்வி எழுப்ப எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. நான் ஒரு போதும் வழக்கு சொத்து சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல.

18) 2014 ல் தான் பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் நுழைந்ததாக நான் கூறுவதற்கு என் வாய்மொழி சாட்சியம் தவிர்த்து பிற ஆவணம் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. ஆவணங்கள் உள்ளன .அத்தகைய ஆவணங்களை என்னால் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். வழக்கு சொத்திற்கு எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லாததால் விளம்புகை பரிகாரமும் சுவாதீன மீட்பு பரிகாரமும் இழப்பீடு பரிகாரமும் கோர எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. நான் வா.சா.ஆ. 9 உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள சொக்கனூர் சொத்து தொடர்பாக எப்பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான்.

19) வழக்கு அயிட்ட 1 சொத்தாக உயில் சாசனத்தில் உள்ளவாறே சொத்தை குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரிதான். வழக்கு 2 அயிட்ட சொத்துக்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்து உள்ளேன். என் வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றும் தள்ளுபடிக்குரியது என்றும் சொன்னால் சரியல்ல. பல வழக்குகளை தாக்கல் செய்து விட்டு அதனை நடத்தாமல் தள்ளுபடிக்கு விட்டுவிட்டு தற்போது புதியதாக இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு

அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம்/- ( மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி